DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.No.26/2018**
Prosecution witness **PW.5 (LW.4)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Paneer Selvam | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 11:40 a.m. to 11:50 a.m. | | |

**(Accused present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.07.2025
29.07.2025 முதல் விசாரணை

நான் கோவை ஒப்பனக்கார வீதியிலுள்ள யூனியன் பேங்க் ஆப் இந்தியாவில் சீனியர் மேனேஜராக பணிபுரிந்து ஓய்வுபெற்று தற்போது சேலத்தில் குடியிருந்து வருகிறேன்.

1) 08.12.2016ம் தேதி மேற்படி பேங்க் ஆப் இந்தியா கோவை கிளையில் நான் பணியிலிருந்தபோது ஆஜர் எதிரி மனோகரன் எங்கள் கிளைக்கு வந்து தான் கோயம்புத்தூரில் ஒரு வீடு கட்டபோவதாகவும் அதற்காக தனக்கு ஹவுசிங் லோன் வேண்டுமென்றும் தான் டேன்டீ-இல் சூப்பர்இன்டென்டாக வேலை பார்த்து வருவதாகவும் கூறினார். அவரது எம்ப்ளாய்மென்ட் சான்றிதழ், டேன்டீயில் வேலை பார்த்து வரும் சம்பள சான்றிதழ், 2015-2016 மற்றும் 2016-2017 வருடத்திற்கான படிவம்-16, யூகோ பேங்கில் தான் கணக்கு வைத்திருக்கும் வங்கி கணக்கு பட்டியல், அசர்ட்ஸ் மற்றும் லையபிளிடி ஸ்டேட்மெண்ட் ஆகியவற்றை தாக்கல் செய்தார். அந்த ஆவணங்களை பார்த்துவிட்டு உங்களுக்கு தகவல் சொல்கிறேன் என்று கூறி எதிரியை அனுப்பி வைத்தேன். எதிரி மேற்படி ஆவணங்களை ஒப்படைக்கும்போது மொத்தம் ஆறு நபர்களின் ரெபரன்சும் கொடுத்திருந்தார்.

2) அன்றையதினமே குன்னூரிலுள்ள டேன்டீ நிறுவனத்திற்கு நான் போன் செய்து மனோகரன் என்பவர் எங்களது கிளையில் விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும் அவர் உங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறாரா என்று கேட்டேன். அவர்கள் ஒரு பத்து நிமிடம் டைம் கொடுங்கள் என்றும் பார்த்துவிட்டு கூறுவதாக சொன்னார்கள். மீண்டும் 10 நிமிடம் கழித்து நான் மேற்படி நிறுவனத்திற்கு போன் செய்தபோது மனோகரன் என்பவர் தங்களது நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்று கூறினார்கள். மேலும் மனோகரன் தாக்கல் செய்த ஆவணங்களை மெயில் மூலம் தங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கூறினார்கள். அதற்கான வேண்டுகோள் கடிதத்தை 09.12.2016ம் தேதி எங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

**(அரசுதரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது)**

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்